# ஸ்ரீகந்தாடைத்தோழப்பர்

## தனியன்

கர்க்கடே பூர்வபல்குந்யாம் ஜாதம் லோகார்ய ஸம்ஸ்ரீதம் /
வந்தே வாத்ஸல்ய ஜலதிம் வராணாதீஸ தேஸிகம் //

## வாழித்திருநாமம்

பூரமதில் கடகத்தில் புவியுதித்தோன் வாழியே
புகழ் பெரியநம்பிள்ளை பொற்பதத்தோன் வாழியே
பார்மலி ராமாநுசாசார்யன் பகர் குமாரன் வாழியே
பரமபத்தி மெய்ஞ்ஞானப் பதத்திருப்போன் வாழியே
வாரணாதீசுவரர் நாமம் வாய்ந்திருப்போன் வாழியே
வாச்சலியக் கடலென்ன வாழ்நருள்வோன் வாழியே
காரிமாறன் தமிழ் மறையின் கருத்தறிந்தோன் வாழியே
கந்தாடை தோழப்பர் கழலிணைகள் வாழியே.

திருவவதாரஸ்தலம் - கோயில்
திருத்தகப்பனார் - கந்தாடையாண்டான்;
திருப்பாட்டனார் - முதலியாண்டான்
ஆசாரியன் - கந்தாடையாண்டான் ;
சிஷ்யர்கள் - குமாரரான பெரியாய், சிற்றாய், ஈயான், அம்மாள்

<u>இவரை பேற்றி உரைக்கும் உபதேசரத்தினமாலை 51ஆம் பாசுரம்</u>

துன்னு புகழ்க் கந்தாடைத் தோழப்பர் தம் உகப்பால்
என்ன உலாகாரியனோ என்றுரைக்க - பின்னை
உலகாரியன் என்னும் பேர் நம்பிள்ளைக்கு ஓங்கி
விலகாமல் நின்றதென்றும் மேல்.

இந்த பாசுரத்திற்கு காஞ்சி ஸ்ரீ PBA ஸ்வாமி அருளியுள்ள விளக்கவுரையை கீழே அனுபவிப்போம்.

நம்பிள்ளைக்கு லோகாசார்யர் என்ற திருநாமத்தை தோழப்பர் சூட்டினார்.

முதலியாண்டான் திருவம்சத்திலே தோன்றி ஆசார்யபுருஷராகப் புகழ்பெற்றிருந்த கந்தாடைத் தோழப்பரென்னும் ஸ்வாமி நம்பிள்ளை காலத்தில் கோயிலில் ஒருவீதியில் வாழ்ந்து வந்தார். அவரும் வித்வானாகவேயிருந்தும் அனைவரும் நம்பிள்ளை திருவடிகளையே ஆச்ரயித்து அர்த்தங்கள் கேட்டு வந்தார்களே யன்றி அவரிடம் ஒருவரும் வந்து பணிந்திலர். அதனால் அவர்க்கு நம்பிள்ளை மீது அஸூயை அதிகரித்து அவரைத் தூஷித்துக் கொண்டேயிருந்தார் அந்தத்தோழப்பர். இப்படியிருக்கையில் ஒருநாள் இவர்க்கு அவர்மேல் அனுதாபம் தோன்றி, நம்பிள்ளையிடம் சென்று அபராதக்ஷாமணம் செய்து கொள்ள வேணுமென்று ஆசையுண்டாகி அவர் புறப்படுவதற்காக இருக்கையில், `ஐயோ! மஹாகுலப்ரஸூதரான இந்தத் தோழப்பருடைய திருவுள்ளம் கன்றும்படி நாம் பிறந்தோமே ! அவரிடம் சென்று பொறுப்பித்துக்கொள்வோம்' என்று நினைத்து நம்பிள்ளை அதே சமயத்தில் அந்தத் தோழப்பர் திருமாளிகையில் வந்து பதுங்கி நின்றார். தோழப்பர் வெளியே எழுந்தருளும் போது அவரை நம்பிள்ளை தெண்டனிட்டு க்ஷமை வேண்ட, இதென்ன ஆச்சரியமான குணம்! என வியந்த கந்தாடை தோழப்பர் நம்பிள்ளையை நோக்கி `நீரென்ன லோகாசார்யரோ!' என்று ஈடுபட்டுக் கூறினார். அதுமுதலாக நம்பிள்ளைக்கு லோகாசார்யரென்கிற பெயர் ப்ரஸித்தியாயிற்று.

ஸ்ரீகந்தாடைத்தோழப்பர் திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: க்ஷந்தவ்ய: